பக்கங்கள்: நான்கு

Registered a sa Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி மீ 03 உ ஞாயிற்றுக்கிழமை [17-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 110

# தமிழ்நாட்டில் கைதாகியுள்ள ஈழ தமிழரை விடுவிக்க முடிவு?

## நீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலி

சென்னை, மார்ச் 17

தமிழகத்தில் கைது செய்யப்பட்டு விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஈழத் தமிழரை அங்கிருந்து விடுவித்து அவர்களைப் பொது முகாம்களில் தங்க அனுமதிப்பது குறித்து தமிழக அரசு பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர் ஒருவர் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பை அடுத்தே இம்முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு தமிழக அரசு தள்ளப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து பிரத்தியேக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை பொது முகாம்களுக்கு அனுப்பி வைப்பது பற்றி தமிழக அரசு பரிசீலனை செய்து வருகின்றது என்ற தகவலை தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை சிறப்பு ஆணையாளர் திரு. சி. எம். ராம்தாஸ் வெளியிட்டார்.

பிரத்தியேக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும்—ஏற்கனவே 254 இலங்கைத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மூன்று மாதங்களுக்குரிய மருந்து வகை வந்தது

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான முதலாம் கந்தாயமான மூன்று மாதங்களுக்குரிய மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பில் இருந்துநேற்று திரும்பிய யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மேற் கண்டவாறு தகவல் தெரிவித்தார்.

இந்த மருந்து வகைகள் நேற்று வந்துசேர்ந்த 'குமண' கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும்—

குழந்தைகளுக்கான தடுப்பூசிகளும் இம்முறை வந்திருப்பதாகவும் பணிப்பாளர் சொன்னார். [ஒ-3]

## தமிழர் குழுக்களுடன் கொழும்பில் ஜா பேச்சு

கொழும்பு, மார்ச் 17

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியாக விடுதலைப்புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு இடையே பொதுக் கருத்து உடன்பாடு ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா ஈடுபட்டிருக்கிறார்.

தூதர் திரு. ஜா கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழர் கட்சிகளின் பிரதிநிதிகளை கூட்டம் ஒன்றுக்கு அழைத்திருந்தார்.

தொடர்ச்சியாக நடத்தப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்., கிளிநொச்சிக்கு விரைவில் டாக்டர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் டாக்டர்கள் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிய வருகிறது.

எதிர்வரும் ஏட்ரல் பதினைந்தாம் திகதி புதிய நியமனங்களைச் செய்வதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாம்:

1988 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறி ஆஸ்பத்திரி உள்ளகப் பயிற்சியைமுடித்துக்கொண்ட புதிய டாக்டர்களே நியமிக்கப்பட உள்ளனர்.

இம்மாதம் இருபதாம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-3]

## யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு ம. எண்ணை: 8 பரல்கள் எடுத்து வருவதற்கு அனுமதி

யாழ்: மாவட்டத்திலுள்ள ஆஸ்பத்திரிகளின் தேவைகளுக்கு மாதாந்தம் எட்டு பரல் மண்ணெண்ணை எடுத்து வர அனுமதி கிடைத்துள்ளது.

சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இதற்கான அனுமதியை கூட்டுப்படைத் தலைமையகம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

டாக்டர்களின் வாகனங்களுக்கு மாதாந்தம் இரண்டு பரல் பெற்றோலும் கிடைக்க இருக்கிறது. [ஒ-3]

## ஆனையிறவு ராணுவம் தினசரி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச்17

ஆனையிறவு இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக—நாள் தவறாமல்—ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

நேற்றும் படையினர் வழமையான தாக்குதலை தொடர்ந்தனர்.

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-15]

## இன விடுதலை பெற சகலரினதும் ஒட்டுமொத்தப் பங்களிப்புத் தேவை

### மறுமலர்ச்சிக் கழக விழாவில் மாத்தயா

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழினம் தனித்துவமான இனமாக விளங்க வேண்டுமானால் எமது மத்தியில் மாற்றமும் அதன் மூலம் சிடிப்பு ஏற்பட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்க இடமில்லை.

பேரினவாதச் சிங்கள அரசு மேற்கொண்டுள்ள இன அழிப்புக்கு எதிராகச் சகலரும் ஒட்டுமொத்தமாகப் பங்களிக்க வேண்டிய அவசிய நிலை உருவாகியுள்ளது.



விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. சோ. மகேந்திரராசா [மாத்தயா] இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 11 ஆவது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப விழாவில் பேசுகையில் திரு. மாத்தயா மேலும் கூறியதாவது:—

மறுமலர்ச்சிக்கழகம் ஆரம்பமான காலத்தை பின் நோக்கிப் பார்த்தால், அதுபோராட்டத்தின் மத்தியிலேயே இன்றைய நிலைக்கும் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

இந்தக் கழகம் எப்போதும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக — அடக்குமுறைக்கு எதிராக — குரல் கொடுத்து வந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்புக்கு பயணிகள்

யாழ்ப்பாணம், மார்ச்16

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று 300க்கும் மேற்பட்ட பயணிகள் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

[ஒ-15]

## முச்சந்தி முரளி




எட்டு பரல் மண்ணெண்ணை

## பட்டம் பெற்றவர் வெளிநாடு ஓடாமல் தடுக்க ஒரு வழி!

### உப வேந்தர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நகரப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், கிராமப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் கஷ்டங்களைப் போக்குவதற்கு உழைக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவ வேண்டும்.

அப்போது தான் கிராம மக்களுடன் இணைந்து செயற்பட வழி உண்டாகும். இத்தகைய செயற்பாடு மாணவரிடையே உரிய மனப்பக்குவத்தை வளர்க்கும்.

அந்த மனப் பக்குவம், பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற பின்னர் வெளிநாட்டுக்கு ஓட வேண்டும் என்ற மனநிலை வராது தடுத்துவிடும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**ரைப்ரைட்டர்கள்**

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும், விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO: 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] [சி-5835]

**கல்வி**

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடம் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். அத்துடன் ஆண்டு 5 இலிருந்து ஆண்டு 11 வரைக்கும், கணிதபாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து ஆண்டு 11 வரைக்கும் விசேட சித்திக்குக் கற்பிப்பதற்கும் பயிற்சியளிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேகசேந்திரா வீதி, சுண்டிக்குளி, [16134]

**அம்பாள் திருமண சேவை**

உங்கள் பிள்ளைகளின் ஜாதகக் குறிப்பை நேரிலோ அல்லது கடிதமூலமோ அனுப்பிவைத்தால் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் திருமண ஒழுங்குகள் செய்து தரப்படும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகம், வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [15912]

**தேவை**

சோயா, குரக்கன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்! அண்ணா தொழிலகம், இணுவில். [சி-4806]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**மரியபாக்கியம் அருளப்பு**

மண்ணில்:
04 — 07 — 1935

விண்ணில்:
15 — 02 — 1991

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள்.

சேந்தாங்குளம்,
இளவாலை.

[16141]

---

உ

## சிவாச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்

பிரமோதூத ஹூ பங்குனி மீ 4  உ [18 03-91] திங்கட்கிழமை காலை 6-17 முதல் 7-45 வரை உள்ள சுப முகூர்த்தத்தில்
அராலி, பிரம்மஸ்ரீ செ. சிவஸ்வாமிக் குருக்களின் பௌத்திரனும், எமது புத்திரனுமாகிய
**பிரம்மஸ்ரீ ப. ஜயகுமார சர்மாவுக்கு,**
நவாலி, அட்டகிரிக் கந்தசுவாமி தேவஸ்தானத்தில், ''சிவாச்சார்ய அபிஷேகம்'' நடைபெறும்.

தீக்ஷா குரு, சிவாச்சாரிய திலகம்,
பிரம்மஸ்ரீ சிவ. சர்வேஸ்வரக் குரு [மயிலணி, சுன்னாகம்]
மேற்படி வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

— (அராலி) செ. சி. பரமேஸ்வர சர்மா,
குடும்பத்தினர்.

அட்டகிரி,
நவாலி. [16107]

---

## ஓராண்டு நினைவு



தோற்றம்: 27 — 09 — 1954

மறைவு: 27 — 03 — 1990

**சிவராமலிங்கம் சிவமோகன்**

**(ராஜாஜி)**

தலைமகனாய் வந்தாய், நிலைமகனாய் நிற்கவேண்டிய நீ எமைவிடுத்து அகன்றாய் ஆண்டொன்று போனது மகனாய், கணவனாய், அப்பாவாய், அண்ணனாய் எமது அகத்தில் புகுந்து புதிய பிறவியாய் தரித்தாய் மோகனமானவனே!

உன் ஆன்மா மறுபிறவி எடுக்கலாம் சிவப்பேறு எய்தலாம். எங்கள் நினைவஞ்சலி; நாம் இருக்கும் வரை நடப்பில் இருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், மனைவி, மக்கள், தம்பி,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,

''தணிகை''
28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி-5851]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
30 - 09 - 1917

மறைவு:
17 - 03 - 1988

அமரர்

**சின்னத்தம்பி தருமலிங்கம்**

[ஓய்வு பெற்ற பொலீஸ் சார்ஜன்ட்]

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் அந்தி, பகலாய் அயராது உழைத்து, வாழவைத்து ஆறாத்து துயரில் ஆழ்ந்திச் சென்ற அன்புத் தெய்வமே!

மூன்றாண்டுகள் சென்றாலும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்.

''தர்மகிரி''
வறுத்தலைவிளான்,
தெல்லிப்பளை. [16108]

---

## க. பொ. த. சாதாரண தரம்
## PRACTICE EXAM
## பயிற்சிப் பரீட்சை

**1990 Dec இல் தடைப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெற உள்ளது.**

★ யாழ். குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.

★ யாழ். மாநகர சபை எல்லை தவிர்ந்த குடாநாட்டின் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு அதனை ஒழுங்கு செய்யலாம்.

★ கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும்.

★ 20 - 03 - 91 க்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 செலுத்துதல் வேண்டும்.

தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

★ பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விவரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

★ தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும்;

ஐந்து பாடங்களுக்குரிய மொத்தப் புள்ளிகளில் அதி கூடுதலான கூட்டுத் தொகையைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கமும், ஒவ்வொரு பாடத்திலும் கூடுதலான புள்ளியை பெறுபவர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும்.

**EXAMINATION UNIT**

**UNIVERSAL**

KANTHARMADAM, JAFFNA.

★★ பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20 - 03 - 91 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

[சி-5845]

---

## கண்ணீர் அஞ்சலி

**முத்துத்தம்பி சந்தியாப்பிள்ளை**

[இளைப்பாறிய தபால் அதிபர்]

குருநகர் மக்கள் மேம்பாட்டில் திருவுளம் கொண்ட நண்பா! குருவென எமக்கு விளையாட்டில் கருதிய நாட்கள் பலவாகும்! மருந்தென இருந்து சமூகத்தே அருளிய காலம் நிலையாகும்! திருமலை இருந்து வருகையிலே உருவம் தாண்டிக்குளமதனை மருவியும் வரவே இல்லையாமே? அரும்பணி முடித்து வாழ்வதனை குருநகர் மண்ணில் கழிப்பதற்கு கருதிய உனது எண்ணங்கள் கருகியா போயின தாண்டுகையில்? இருவிழி சிந்தும் கண்ணீரால் குருதியை நீராய் உகுக்கின்றோம்!

விளையாட்டுத்துறை,
சனசமூக நிலைய நண்பர்கள்.

குருநகர். [சி/5860]

---

## மரண அறிவித்தல்

**செல்வராயன் துரைசிங்கம்**

கந்தர்மடம் திருமணம் நிறைவேற்று நிலைய இயக்குனர் புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி, சற்குணராசா, திருமதி இராசம்மா ஐயாத்துரை, திருமதி பரமேஸ்வரி சண்முகம், திருமதி சௌந்தரேஸ்வரி [மணி] கணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையார் செல்வராயன் துரைசிங்கம் தமது 105 ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

அன்னாரது ஈமச் சடங்குகள் [இன்று] 17 - 3 - 91 ஞாயிறு காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி.
[மகன்]

140 அரசடிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [16188]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## புருடா நாடகமா?

மத்திய கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் இப்போது முனைப்புடன் ஆர்வம் காட்டி வருகின்றன. அமெரிக்க வெளியுறவு அமைச்சர்ஜேம்ஸ் பேக்கரின் இஸ்ரவேல் விஜயம் அந்த ஆர்வத்தின் ஆரம்பப் புள்ளியாகக் கருதப்படுகிறது.

வளைகுடாப் பிரச்சினையின் விளைவாக முஸ்லிம் நாடுகள் அணி பிரிந்து சிதறிப் போயுள்ள இந்நேரத்தில், மத்திய கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து விடுவது சுலபம் என்று அமெரிக்கா கருதுகிறது. தனது செல்லப் பிள்ளையான இஸ்ரவேலுக்குச் சாதகமான ஒரு தீர்வை உருவாக்குவதற்கு இதனை விட நல்ல சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்று அது நம்புகிறது. தனக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நிலவிய கெடுபிடி யுத்த நிலை நீங்கிவிட்டது. ஆகவே வளைகுடாவில் நடந்தது போல, ரஷ்யாவை ஓரங்கட்டிவிட்டு, தனது நலனுக்குச் சாதகமான ஒரு தீர்வை உருவாக்க இப்போதைய சூழ்நிலையை விட வாய்ப்பான காலம் வராது எனவும் அது கணக்குப் போட்டிருக்கலாம்.

எது எப்படியோ, பேக்கரின் இஸ்ரேலிய விஜயம் நம்பிக்கை தருவதாக மேலை நாட்டு பிரசாரப் பீரங்கிகள் முழங்குகின்றன. ஆயின் உள்ளே நுணுகி ஆராய்ந்தால் அங்கு ஆக்கபூர்வமாக, பெரிதாக எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

சமாதானத்துக்காக எங்கள் மண்ணை விட்டுக் கொடுக்க முடியுமா என்று இஸ்ரவேல் தலைவர்கள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். பேக்கருடன் நடத்தப்பட்ட பேச்சில் அது பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்கப்படவில்லை என்கிறார்கள். மத்திய கிழக்குச் சம்பந்தமாக ஐ. நா. இயற்றிய தீர்மானங்களைத் தாம் எப்போதோ பூர்த்தி செய்து விட்டதாகப் பொய்ப் பாடல் இசைக்கிறார்கள். கோலான் குன்று மேற்குக் கரை பிரதேசங்களில் தேர்தலை நடத்தி அரசாங்கம் ஒன்றை உண்டாக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்து போய்விடும் என்று திசை திருப்புகிறார்கள்.

இந்த இலட்சணத்தில் மத்திய கிழக்கில் தீர்வு வரும் சாத்தியம் உண்டு என்று எவ்வாறு கருதுவது?

அரபு - இஸ்ரவேல் பிரச்சினை 43 வருட காலத்திய நாட்பட்ட புண். இஸ்ரவேல் தனது எல்லையை விஸ்தரிக்கும் மண் ஆசையினால் அயலில் உள்ள பலஸ்தீனியப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறது. அமெரிக்கா பக்கத் துணைக்கு இருக்கும் உஷாரில் மூன்று யுத்தங்களை நடத்தியது. 1967 யுத்தத்துக்குப் பின் ஐ. நா. இயற்றிய 242, 338 ஆம் இலக்கத் தீர்மானங்களை ஏற்க மறுத்து தன்னிச்சையாகப் பெரும் திமிருடன் நடந்து வருகிறது.

எனவே இது விவகாரத்தில் தீர்வு ஒன்று கருக்கொள்ள வேண்டுமானால், தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து வெளியேறக் கோரும் ஐ.நா. தீர்மானங்களை இஸ்ரவேல் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அதற்கு அழுத்தம், நெருக்குதல் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் எல்லாமே வெறும் புருடா ஆகிவிடும். இந்தப் புருடா நாடகத்தில் அமெரிக்காவும் முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்க முன் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# 50 சதவீதமான குழந்தைகள்
# நிறை குறைந்து பிறக்கின்றன

பிரசவமாகும் குழந்தைகளில் ஐம்பது சதவீதமானவை, நிறைகுறைந்தவை ஆகும்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட தாய் — சேய் நல ஆய்வின்போது மேற்கண்ட விவரம் தெரிய வந்துள்ளதாக தாய் — சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தற்போதைய யுத்த கால நிலையால் பெரும்பாலான கர்ப்பிணித் தாய்மார் போஷாக்கின்மை, இரத்த சோகை போன்ற நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிசுக்களுக்கு பிராண வாயுவை எடுத்துச் செல்லும் வஸ்து இரத்தத்தில் குறையும் 'ஹீமோ குளோபின்' என்ற நோயாலும் கர்ப்பிணித் தாய்மார் பலர் பாதிக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. [இ-18]

## வல்லை பற்றிய அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

வல்லையில் ஏற்பட்ட அழிவுகள், சேதங்கள், உயிரிழப்புகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. செ. ஜே. விஜயதாசாவிடம் யாழ். அரசாங்க அதிபர் கொழும்பில் வைத்துச் சமர்ப்பித்தார். [இ-5]

## கடலில் காணப்பட்ட படகு படையினரிடம்

புங்குடுதீவு தென்கடற் பிராந்தியத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பிளாஸ்டிக் படகொன்றை நயினாதீவு கடற்படையினர் எடுத்துச்சென்றனர். [இ-131]

## மரம் நடும் வைபவம்

குருநகர், மார்ச் 17

நாவாந்துறை, கலைவாணி சனசமூக நிலைய விளையாட்டரங்கில் கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு மரம் நடும் வைபவம் நடைபெற்றது.

பிரதம அதிதிகளாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா, மில்க் வைற் அதிபர் சிவதர்மவன்னல் க. கனகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். [இ-51]

## 12 பேர் ஓய்வு

தென்மராட்சி, மார்ச் 17

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 12 கிராமசேவை அலுவலர்கள் சுயவிருப்பு இளைப்பாற்றுத் திட்டத்தின்கீழ் இளைப்பாறி உள்ளனர். [இ-171

### 25 பிரிவுகளில் கடமை ஆற்றும்

# அரசாங்க ஊழியருக்கு வீடு, காணி, இலகுகடன்

கொழும்பு. மார்ச் 17

வட மாகாணத்தில் துணுக்காய் மற்றும் பாண்டியக்குளம் ஆகிய இடங்களில் பணிபுரிய முன்வரும் அரச ஊழியர்களுக்கு வீடு, விவசாயக் காணி ஆகியவற்றுடன் இலகு கடன் வசதிகளையும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது

வீட்டு வசதி, விவசாயக் காணி மற்றும் இலகு கடன் பெறும் வாய்ப்பு ஆகியவற்றை நாட்டின் ஒன்பது மாவட்டங்களில் 25 பிரிவுகளில் பணிபுரிய முன்வரும் அரச ஊழியர்களுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அந்த 25 பிரிவுகளில் துணுக்காயும், பாண்டியக்குளமும் உள்ளன.

ஏனைய பிரிவுகள் வருமாறு;

சேருவில், பதவி-சிறிபுர, கோமரங்கடவல, பதவியா கொட்டவெஹர, கிரிபவ, நவகத்தகம, மகாகும்புக்கடவல, வனாத்தவில்லுவ, மகாவிலாச்சியா, பலகல்ல, எலஹெற திம்புலகால, லங்காபுர, மெதிரிகிரிய, ரிடிமாலி, யத்த, கந்தகெத்திய, மீகாஹகிவுல், மதுள்ள, சியம்பலாந்துவ. செவலன்ன, வெலிகபொல, அயகம்.

குடியிருப்புக்கு உகந்த பிரதேசங்கள் அல்ல என்று முன் கண்ட இடங்கள் கணிக்கப்பட்டுள்ளன. [இ-எ]

# மடு அகதிகள் விவகாரம்; இந்தியா ராஜீய தலையீடாம்

லண்டன், மார்ச் 17

மடுமாதா கோவில் பகுதியில் உள்ள அகதிகளை தொடர்ந்து முகாம்களில் தங்க அனுமதித்த விடயத்தில் இந்தியா இலங்கைக்கு ராஜீய ரீதியில் நெருக்குதல் கொடுத்ததாக நம்பப்படுகிறது.

இவ்வாறு பி பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

மடு அகதி முகாமை கடந்த செப்டம்பரில் ஐ. நா. அகதிகளுக்கான ஸ்தானிகராலயம் பொறுப்பேற்றது என்றும், இந்த முகாமை ஐ. நா. பொறுப்பேற்காத விடத்து இங்கிருந்து அகதிகள் பலரும் தென்னிந்தியா சென்றிருக்கக் கூடும் என்றும் அந்தச் செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [இ-5]

# அமெரிக்க படைகள் மேலும் 50 இலோ மீற்றர் நகர்வு

வளைகுடாவில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்ட போது நிலை கொண்ட எல்லையில் இருந்து மேலும் 50 கிலோ மீற்றர் தூரம் அமெரிக்கப்படைகள் ஈராக் பிரதேசத்தினுள் ஊடுருவிச் சென்றுள்ளன என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அமெரிக்கப் பாதுகாப்புப் படை வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

இந்தப் படை நகர்வை புதிய இராணுவ நடவடிக்கைக்கான அடையாளமாகக் கருதக் கூடாது என்று அமெரிக்கப்படைத் தளபதி ஒருவர் சொன்னார்.

ஈராக் பிரதேசத்தில் அமெரிக்கப்படைகள் இருக்கின்றன என்பதை ஈராக்குக்கு மீண்டும் வலியுறுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இந்தப் படை நகர்வு அமைகிறது என்றும் அந்த அதிகாரி சொன்னார். [இ-எ]

# யூகோ. ஜனாதிபதி யோவிச் பதவியைத் துறந்தார்

கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்று வரும் கம்யூனிஸ் எதிர்ப்புக் கிளர்ச்சியின் உச்சக்கட்டமாக யூகோஸ்லேவியா ஜனாதிபதி போரிஸ் யோவிச் நேற்று ராஜினமாச் செய்தார்.

கிளர்ச்சியை அடக்க நாட்டில் அவசரகால நிலையைப் பிறப்பிக்க வேண்டும் என்று செர்பியா இனத்தவரின் ஆதிக்கத்தில் உள்ள யூகோஸ்லேவியா இராணுவத் தலைமைப்பீடம் ஆலோசனை கூறியது. இதனை அரசுத் தலைமைப்பீட உறுப்பினர்களில் பெரும்பாலோர் எதிர்த்தனர். ஜனாதிபதி மட்டுமே இந்த யோசனையை ஆதரித்தார். அதனைத்தொடர்ந்தே ஜனாதிபதி பதவி விலகினார்.

நாட்டை சிவில் யுத்தம் ஒன்றுக்கு இட்டுச் செல்வதாக இராணுவ யோசனையை நிராகரித்த செயல் அமைவதாக பதவி விலகிய ஜனாதிபதி தெரிவித்தார்.

இப்பதவி விலகலால் யூகோஸ்லேவியாவில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் ஸ்திரமின்மை அங்கு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு மாநிலக் குடியரசுகளையும், இரண்டு மாகாணங்களையும் கொண்ட சமஷ்டி நாடான யூகோஸ்லேவியாவில் இன உணர்வு மாநிலம் தோறும் ஏற்பட்டுள்ளது. இது சமஷ்டி அமைப்பை ஆட்டம் காணச் செய்வதாக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

# 6 ஆம் ஆண்டு வரலாற்று நூலை பயன்படுத்த ஆட்சேபம்

6ஆம் ஆண்டுக்கான வரலாற்று நூலில் சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் பின்னணியாகக்கொண்ட அம்சங்கள் நிறைந்திருப்பதால் தமிழ்ப் பாடசாலைகளில் இந்த நூலை உபயோகிப்பதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. இது தொடர்பான நீண்ட அறிக்கை ஒன்று கல்வி அமைச்சர், கல்வி துணை அமைச்சர் ஆகியோருக்கு பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவத்தால் அனுப்பப்பட்டுள்ளது. சங்கம் விடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முரணான அம்சங்கள் வருமாறு:

1. அட்டைப்படத்திலும், உள்ளேயுள்ள ஏனைய படங்களிலும் சிங்கள பௌத்த அடிப்படையிலான படங்களே காணப்படுகின்றன. தமிழ், இந்து, இஸ்லாமிய [illegible] வப் பின்னணிகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு படமாவது இல்லை.

2. இந்நூலின் ஆலோசனைக் குழு, பதிப்பாசிரியர் குழு, ஓவியர் அனைவரும் சிங்கள பௌத்தர்கள். தமிழர்களோ, இஸ்லாமியர்களோ, பௌத்த மதத்தை தவிர்ந்த ஏனைய மதத்தினரோ இக்குழுக்களில் இல்லை. சிங்கள பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் அனைவரும் ஆலோசனைக் குழுவில் அங்கம் பெறுகின்றவர். ஆனால் யாழ்ப்பாண, கிழக்கு பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் இக்குழுவில் இடம்பெறவில்லை. சிங்கள பௌத்தர்களைக் கொண்ட குழுவினர் ஒரு பக்கச் சார்பான வரலாற்றையே எழுதியுள்ளனர். இது ஏனைய இனத்தவருக்கும், ஏனைய மதத்தினருக்கும் எவ்வகையிலும் பொருந்தாது.

3. ஆறு சிங்கள அரசர்களில் ஆட்சி பற்றி எழுதப்பட்டுள்ளது. தமிழ் அரசர்கள், இராட்சியங்கள் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை.

4. துட்டகைமுனு, எல்லாளனுடன் போராடச் சென்ற பாதை இலங்கை வரைபடத்தில் கீறிக் காட்டப்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம், சிங்கள மாணவர்களை தமிழர்களுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்யும் அடிப்படையுடையதாகக் காணப்படுகின்றது. உலகத்தின் எந்த நாட்டு வரலாற்றுப் புத்தகத்திலும் அரசன் போரிடச் சென்ற பாதை படப்புத்தகத்தில் கீறிக் காட்டப்பட்டதை நாம் அறியவில்லை.

5. விஜயனும்தோழர்களும் முதல் முதலாக இலங்கையில் குடியேறினார்கள் என்றும், அவர்களின் பின்னரேயே நாகரீகமான மனிதர்கள் இலங்கையில் தோன்றினார்கள் என்றும் முற்றிலும் தவறான கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

6. தென்னிந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையிலான உண்மையான திராவிட தொடர்புகள் முற்றாக மறைக்கப்பட்டு, வட இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையேயிருந்ததாக கட்டுக்கதைமூலம் எழுதப்பட்ட மகாவம்சத்தின் அடிப்படையிலான ஆரியர் வருகைக்கு மேலதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

7. பல பௌத்த விகாரைகளின் படங்கள் போட்டு, அதன் வரலாறுகள் விவரிக்கப்பட்டுள்ள அதே சமயத்தில் ஏனைய சமயங்களாகிய இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்கள் இலங்கையில் இல்லையென்ற அளவுக்கு நூல் எழுதப்பட்டுள்ளது

8. துட்டகைமுனுவால் தோற்கடிக்கப்பட்ட எல்லாளன் என்ற சோழ மன்னன் 44 ஆண்டுகள் இராஜரட்டையில் ஆட்சி செய்த செங்கோலாட்சியாளன், என்ற ஒரு வசனத்துடன் எல்லாளனின் ஆட்சி முடிவடைந்து விடுகிறது. ஆனால் இதிலும் குறைந்த ஆண்டு கொடுங்கோலாட்சி செய்த சிங்கள அரசர்களின் வரலாற்றிற்கு பல பக்கங்கள் கொண்ட அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது.

9. தென்னிந்திய அரசர்களாகிய சோழ, பாண்டியர்களின் படையெடுப்புகள் பற்றிக்குறிப்பிடும் போது அவர்கள் கொள்ளையாட்டக்காரர்கள், கொள்ளையர்கள் என்ற பதங்கள் அடிக்கடி பாவிக்கப்பட்டுள்ளன. [இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியன் அமைப்பு நிலைக்குமா?

## இன்று சர்வசன வாக்கெடுப்பு

சோவியத் யூனியனின் தற்போதைய ஆட்சி முறையின் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கும் சர்வசன வாக்கெடுப்பு இன்று ஞாயிறு நடைபெறுகிறது.

சோவியத் யூனியன் அமைப்பு இப்போது உள்ளது போலவே தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதை அறிவதற்காக நடத்தப்படும் இந்தக் கருத்துக் கணிப்பை லித்துவேனியா, லத்வியா, எஸ்தோனியா, ஜோர்ஜியா, ஆர்மேனியா, மொல்டேவியா ஆகிய மாநிலக் குடியரசுகள் பகிஷ்கரிக்கின்றன.

இந்த ஆறு குடியரசுகளும் ஏற்கனவே சொந்தமாக சர்வசன வாக்கெடுப்பு நடத்தி, சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சுதந்திர நடுகளாக மாறுவது என்று தீர்மானித்துள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## முத்துத்தம்பி சந்தியா

[தபாலதிபர் யாழ்ப்பாணம், கண்டிக்குளி, திருமலை]

முத்துத்தம்பி சந்தியா [தபாலதிபர் யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, திருமலை] அவர்கள் 14 - 3 - 91 வியாழன் அன்று வுனியாவில் காலமானார். இவர் றோஸ்மேரி [பொன்னம்மா] யின் அன்புக் கணவரும், செல்வச்சந்திரன் [பிரான்ஸ்], தவச்சந்திரன், ஜீவசந்திரன், றூபச்சந்திரன், விமலச்சந்திரன், சந்திரிகா, சிம்சன் பிரேமச்சந்திரன், எலிசா சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும்; திரேஸ்மலர், அன்னம்மா, விக்ரோரியா ராசாத்தி [பிரான்ஸ்], காலஞ்சென்ற அசஸ்ரின் ஆகியோரின் அன்புச் சகோதரனும்; காணிக்கை, வேதநாயகம், பாலாமாஸ்டர் [பிரான்ஸ்] பொலிகண்டியைச் சேர்ந்த ராசா, தங்கமணியின் அன்பு மைத்துனரும் ஆவார், அன்னாரின் நல்லடக்கம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மு. பிரான்சிஸ்.

24/6 மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். [16135]

## திருமதி பொன்னையா சின்னத்தங்கம்

முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி பொன்னையா சின்னத்தங்கம் 16 03 91 காலை 10.00 மணிக்கு காலமாகிவிட்டார்.

இவர் பொன்னையா [அண்ணாவியார்] இன் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், புவனேஸ்வரி, பார்வதிதேவி [முல்லைச்சகோதரிகள்], இந்திராணி [கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை], புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினசிங்கம் [சவூதி], நாகராஜா செல்லத்துரை [சவூதி], இலங்கைநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் மகராஜன், பிரசாந்தன், தயானந்தன், குகதாசன் ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 18.03.91 திங்கட்கிழமை நடைபெற்று நண்பகல் 2 00 மணிக்கு பூதவுடல் முள்ளியவளை மயானத்திற்கு தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னையா
[அண்ணாவியார்]

1 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை [16149]

## வல்லிபுரம் அம்பிகைபாகன்

[சந்திரன்]

வல்லிபுரம் அம்பிகைபாகன் கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வல்லிபுரம் தம்பதிகளின் மகன் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற உமாமகேசன் [சொக்சர்], பஞ்சாட்சரம் [சுவிஸ்], தனநாயகம் [சவூதி], காலஞ்சென்ற வாகீஸ்வரி [மலேசியா]. Dr யோகீஸ்வரி [குகன் வைத்தியசாலை மல்லாகம்], ஜெகதீஸ்வரி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுப்பிரமணியம் [மலேசியா], Dr. சிவபாதம் [குகன் வைத்தியசாலை], மயில்வாகனம், இராசதுரை [சுவிஸ்], பூமாதேவி [சுவிஸ்], சின்னத்தங்கம், மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் விவேகானந்தனின் சிறியதந்தையும் சுகந்தினி, சியாமளா, மயூரன், யசோதினி, கஜனி, அபிராமி, நவதீபன், ரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் கொழும்பில் 14.3.91 இல் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மயில்வாகனம்
[மைத்துனர்]

கல்லாரை,
மல்லாகம் [15913]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாணவர் உணவு முத்திரை வாய்க்கெட்டாத நிலையில்!

குருநகர், மார்ச் 17

மாணவர் உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்குவதில் தாமதம் காட்டப்படுகிறது.

உணவு முத்திரைக்குரிய பொருள்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று கூறி ஒரு சிலகூட்டுறவுச்சங்கக்கிளைகள் கையை விரிக்கின்றனவாம்.

கடந்த வருடம் மே மாதத்தில் மதிய உணவு நிறுத்தப்பட்டதன் பின்னர் யாழ். மாவட்ட மாணவர்களுக்கு இப்போதே புதிய திட்டத்தின் கீழ் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

பல பாடசாலைகளில் கடந்த பதினைந்தாம் திகதியே உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன.

தமது பிள்ளைகளின் உணவு முத்திரைகளை எடுத்துக் கொண்டு நேற்றுத் தத்தமது பகுதி கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்ற பெற்றோர்கள் ஏமாற்றம் அடைந்தனர். வெறுங்கையோடு திரும்பினர்.

காலம் பிந்தி வந்த உணவு முத்திரைகள் யாழ். நகரபகுதி மாணவருக்குக் கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலையாகிவிட்டது! [அ-51]

## ஆஸ்பத்திரி குழு திரும்பியது

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ் ஆஸ்பத்திரிக்குதேவையான - பல லட்சம் ரூபாபெறுமதியான - அவசர மருந்து வகைகள் வாகனம் மூலம் நேற்று கொண்டு வரப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியின் பிரச்சினைகள் குறித்து சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த கொழும்பு சென்ற வைத்திய அதிகாரிகள் குழுவே இந்த மருந்து வகைகளை எடுத்து வந்தது.

நேற்று மாலை இந்தக் குழு யாழ்ப்பாணம் திரும்பியது. [ஒ-3-15]

## ரயில்வே ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ் மாவட்ட ரயில்வே ஓய்வூதியர்களுக்குரிய பெப்ரவரி மாத வவுச்சர்களை நாளை யாழ். செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-3]

## பலாலி ராணுவம் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 17

நேற்றுக் காலை 6 30 மணி முதல் 7 மணிவரை பலாலி இராணுவ முகாமிலிருந்து வல்லைவெளிப் பக்கமாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தொண்டைமானாறு, இடைக்காடு, வளலாய் கரையோரப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கடல் பகுதியில் இருந்தும் குடியிருப்புகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

கட்டுவன். தெல்லிப்பழை, கொல்லன்கலட்டிப் பகுதிகளில் ஹெலியும் வேட்டுக்களைத்தீர்த்தது.

கட்டுவன், வீமன்காமம் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. [ஒ-68-15]

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாவட்டக் கொத்தணி அதிபர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள் கலந்து கொள்ளும் விசேட கூட்டம் ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் ஸ்தான சீ.சீ. தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

புலமைப் பரிசில், ஜி. சீ. ஈ. பரீட்சைகள் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாக [illegible] தெரிவித்துள்ளார். [ஓ]

## நயினாதீவுப் படையினர் இரவில் கடலில்ரோந்து

### சூடுபட்ட மீனவர் ஆஸ்பத்திரியில்

புங்குடுதீவு, மார்ச் 17

நயினாதீவு கடற்படையினர் இரவு வேளைகளில் ஆரவாரம் ஏதுமின்றி கடற்பகுதியில் ரோந்து செல்கின்றனர்.

படையினர் மாலை வேளைகளில் படகுகளைச் சத்தமின்றி கையால் வலித்து வந்து குறிப்பிட்ட இடத்தில் நங்கூரமிட்டு விட்டு கடலில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்

இவ்வாறு ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் நேற்று முன்தினம் படகு ஒன்றின் மீது திடீரென வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அதைத் தொடர்ந்து படகில் இருந்த தந்தையும் மகனும் கடலில் பாய்ந்து நீந்தினர் எனினும் படையினர் தொடர்ந்து வேட்டுக்களைத் தீர்த்தனர்.

வேலணைத் துறையைச் சேர்ந்த பிள்ளையான் செல்லையா (65 வயது) என்பவர் கரையை அண்மித்ததும் எழுந்து ஓட முற்பட்டார். அப்போது அவர் சூட்டுக்கு இலக்கானார்.

அவரது மகன் கடலில் நீரின் அடியில் சிறிது நேரம் ஒளிந்திருந்து பின்னர் கரை சேர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-131-15]

## இன விடுதலை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது. மறுமலர்ச்சி மன்ற உறுப்பினர்கள் பலர் தேசவிடுதலைக்காக உயிரையும் ஈந்துள்ளனர்.

சிங்கள அரசு இன்று மேற்கொண்டுள்ள இன ஒழிப்பு நடவடிக்கையின் போது, என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் தாமாகவே நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். சமூகத்தின் — இனத்தின் — விடிவுக்கு சகலரும் ஒற்றுமையுடன் ஒட்டுமொத்தமாகப் பங்களிக்க வேண்டிய காலம் இது - என்றார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரும், மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு வே. பாலகுமாரனும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர். [அ-3]

## தமிழ்நாட்டில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் அகதிகள் பிரத்தியேக முகாம்களில் இருந்து சாதாரண முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் திரு. ராம்தாஸ் தெரிவித்தார்.

வேலூர், புழலேரி ஆகிய இடங்களில் உள்ள நான்கு பிரத்தியேக முகாம்களில் போராளிகளுடன் சுமார் 2 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. ராம்தாஸ் சொன்னார். [இ-எ]

## பட்டம் பெற்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

—இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் பதினோராவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு மறுமலர்ச்சிக் கழகம் பெரிதும் உதவி வருகிறது என்றும் உபவேந்தர் சொன்னார். [அ-3]

## தமிழர் குழுக்களுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுவரும்ஆலோசனைகளின் ஒரு கட்டமாக வெள்ளிக்கிழமைகூட்டம் இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் புளொட், ரெலோ, ஈ.பி ஆர்.எல்.எவ். ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கைத் தமிழ் காங்கிரஸ்ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அடுத்து நடைபெறவிருக்கும் சர்வ கட்சிக் கூட்டத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்படும் பொதுக் கருத்து சமர்ப்பிக்கப்படும் என்று இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது. நேற்றும் [சனிக்கிழமை] இச் சந்திப்பு இடம்பெற்றதாக இந்திய வானொலி அறிவித்தது.

வடக்கு — கிழக்கு நெருக்கடியை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர பொதுக்கருத்து ஒன்றை தமிழ்க்குழுக்கள் அரசின் முன் வைக்க வேண்டும் என்று இந்தியத் தூதர் இச் சந்திப்புக்களின்போது தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார். [உ-எ]

## காந்தன்ஸ் பான்ஸி பலஸ்

14, பசார் வீதியில் இயங்கி வந்த மேற்படி ஸ்தாபனம் அதே இடத்தில் மீண்டும் 18 - 03 - 91 இல் ஆரம்பிக்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

[16106]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org